Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution PW 5 |
| | | Defence |
| | | Court |
| Name | : சுமதி | |
| Father / Husband Name | : பாலகிருஷ்ணன் | |
| Village | : அருப்புக்கோட்டை | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : நெசவு | |
| Religion | : இந்து | |
| Age | : 46 | |

( 2,3 எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 18.09.2025.

(நீதிமன்றத்தில் இலவச சட்ட உதவி மைய வழக்கறிஞர் திருமதி.ஏ.அனிதா, பதிவு எண் 1128/2015 மற்றும் வழக்கறிஞர்கள்

திரு.எம்.தங்கபாண்டியன், பதிவு எண் 539/2007 மற்றும் திரு.எம்.அமல்ராஜ், பதிவு எண்.4978/2021 ஆகியோர் இருந்தார்கள்.)

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டை, விருதுநகர் மெயின்ரோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் தறி வேலை செய்து வருகிறேன். என் கணவர் பெயர் பாலகிருஷ்ணன் (அ.சா.3). என் கணவரின் சின்னம்மாவான கனகவள்ளி என்பவர் ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள சாலியர் மகாஜனசபைக்கு சொந்தமான வீட்டில் வாடகைக்கு குடியிருந்து வந்தார். கனகவள்ளி அவர்களுக்கு ஒரே மகன் அருணகிரி ஆவார். அவருக்கு திருமணம் ஆகி என் வீட்டிற்கு எதிரே 2 வீடு தள்ளி தனிக்குடித்தனமாக வசித்து வந்தார். அருணகிரி பாவு பிணைக்கும் வேலை செய்து வருகிறார். அவருடைய மனைவியான கற்பகம் அவர்கள் தறி வேலை செய்து வருகிறார்.

2. பொதுவாக என் கணவர் வேலைக்கு சென்றுவிட்டு இரவு 10.30 மணியளவில் வீடு திரும்புவார். எங்கள் தெருவில் குடியிருக்கும் சிவக்குமார் என்பவர் சற்று மனநிலை சரியில்லாத நிலையில் இருப்பதால் ஜனவரி மாதம் கடைசி வாரம் வாக்கில் வீட்டிலிருந்து காணாமல் போய்விட்டார். சுமார் இரண்டு நாட்களாக வீட்டிற்கு வரவில்லை. அவருடைய மனைவி என் கணவரிடம் அவருடைய கணவரை தேடிப்பார்க்குமாறு கூறினார். கடந்த 31.01.2019 அன்று என் கணவர் இரவு வேலை முடித்து சிவக்குமாரை தேடி சென்ற போது என் சின்ன மாமியார் வீட்டு வாசலில் வத்தல் மற்றும் மல்லி ஆகியவைகள் இரவு 11.00 மணியளவில் காய வைத்த நிலையிலேயே இருந்தது. இதனை கண்ட என் கணவர் என் சின்ன மாமியாருக்கு போன் செய்துள்ளார். போனை எடுக்காததால் கதவை தட்டியபோது கதவு உள்பக்கம் தாழ் போடாமல் மூடிய

நிலையில் இருந்தது. கதவை திறந்துபார்த்தபோது அவருடைய சின்னம்மா இரத்த வெள்ளத்தில் மல்லாக்க கிடந்துள்ளார். அவர் கீழே விழுந்து இறந்திருக்கலாம் என எங்கள் வீட்டிற்கு வந்து என்னிடம் இரவு 11.15 மணியளவில் கூறினார். அதற்கு முன்பே அருணகிரிக்கு தொலைபேசியில் இது சம்மந்தமாக தகவல் தெரிவித்தார்.

3. அதன் பேரில் நானும், என் கணவர், அருணகிரி மற்றும் அவருடைய மனைவி ஆகியோர் என் சின்ன மாமியாரின் வீட்டிற்கு சென்றோம். அ.சா.1 அருணகிரி மற்ற உறவினர்களுக்கு தகவல் தெரிவித்தார். சிறிது நேரத்தில் அ.சா.1ன் பெரியப்பா மகன் இருவர், ஆஜர்எதிரிகள் இருவர் ஆகியோர் என் சின்னமாமியார் வீட்டிற்கு வந்துவிட்டார்கள். எனது கணவர் எங்கள் வீட்டில் தறி வேலை செய்யும் முத்துமாரி என்பவருக்கு போன் செய்து அவரை கனகவள்ளியின் வீட்டிற்கு வருமாறு அழைத்தார்.

4. ஆஜர்எதிரி பாண்டியராஜன் தரையிலிருந்த இரத்தத்தை சுத்தம் செய்யுமாறும், பிரேதத்தை அலசுமாறும் கூறினார். அதன் பேரில் தரையை என் கணவரும், அ.சா.1 அருணகிரியும், முத்துமாரியும் கழுவி விட்டனர். இறந்த நபரின் உடலை என் கணவரும், அ.சா.1 அருணகிரியும் தூக்கும்போது அவர் காது அறுபட்டு, கழுத்தில் வெட்டுக்காயமும் இருந்த காரணத்தினால் அவருடைய இறப்பில் சந்தேகம் இருப்பதாக கருதி என் கணவர் காவல்நிலையத்திற்கு புகார் அளிக்க சென்றார். 3ம் எதிரி கணேசன் காவல்நிலையத்திற்கு போனில் தகவல் தெரிவித்தார். மேலும், கனகவள்ளி அவர்கள் காதில் அணிந்திருந்த தோடு, மாட்டல், சின்ன மாட்டல், மூக்குத்தி, செயின் ஆகியவைகளை காணவில்லை. ஆகையால் நகைகளுக்காக அவரை கொலை செய்திருக்கலாம் என

அறிந்துகொண்டோம். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். நடந்த விவரங்களை கூறினேன்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

5. எனது கணவர் பாலகிருஷ்ணன் எனக்கு இரவு 11.15 மணியளவில் தகவல் தெரிவித்தார். மற்ற உறவினர்களுக்கு அருணகிரி போன் செய்து தகவல் கூறினார். யார் யார் எல்லாம் கனகவள்ளி வீட்டிற்கு வந்தார்கள் என்றால் முதலில் நீங்கள் (2ம் எதிரி) வந்தீர்கள். அடுத்து அருணகிரியின் பெரியப்பா மகன்களான மகாலிங்கம் மற்றும் மாடசாமி ஆகியோர் வந்தார்கள். அதன் பிறகு இறந்த கனகவள்ளியின் தகப்பனார் வந்தார். கனகவள்ளியின் கணவருக்கு இறந்துவிட்டார் என தகவல் கூறாமல் அவருடைய உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளதாகவும், அதனால் விரைந்து வருமாறு தகவல் கூறப்பட்டது.

6. யார் குளிப்பாட்ட சொன்னார்கள் என்றால் நீங்கள் தான் (2ம் எதிரி) குளிப்பாட்ட சொன்னீர்கள். மற்ற உறவினர்களும் நீங்கள் (2ம் எதிரி) சொன்னதை ஆமோதித்தார்கள். தகவல் தெரிந்து எவ்வளவு நேரத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சிறிது நேரத்தில் வந்துவிட்டார்கள். நான் பதற்றமாக இருந்ததால் என் வீட்டிற்கு வந்துவிட்டேன். அதனால் போலீசார் எத்தனை மணிக்கு சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்று குறிப்பிட்டு கூற முடியாது.

7. போலீசார் விசாரணைக்காக என் கணவர், அருணகிரி மற்றும் உங்களை (2ம் எதிரி) காவல்நிலையத்திற்கு 31.01.2019 நள்ளிரவு அழைத்து சென்றார்கள். என்னையும், முத்துமாரி மற்றும் என் கொழுந்தனார் பிரகாஷ் ஆகியோரை 01.02.2019ம் தேதி காலை 9.00 மணிக்கு விசாரணைக்காக காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள்.

அருணகிரியை மட்டும் 01.02.2019 அன்று காவல்நிலையத்திலிருந்து விடுவித்தார்கள். என்னையும், என் கணவரையும் 02.02.2019 அதிகாலை 3.30 மணிக்கு காவல்நிலையத்திலிருந்து விடுவித்தார்கள். போலீசார் என்னையும், முத்துமாரியையும் அடித்து விசாரித்தார்கள் என்று சொல்வது தவறு. எங்களை போலீசார் அடிக்கவில்லை. காவல்நிலையத்தில் எங்களுக்கு துணையாக 2 பெண் காவலர்கள் இருந்தார்கள்.

8. காவல்நிலையத்திலிருந்து நான் வெளியே வரும்போது 1ம் எதிரி ராஜாவும், நீங்களும் (2ம் எதிரி) இருந்தீர்கள் என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னிடம் காவல்நிலையத்தில் கையெழுத்து வாங்கினார்களா என்று நினைவில் இல்லை. 02.02.2019 அன்று போலீசார் என்னிடம் 1ம் எதிரி ராஜா, நான் (2ம் எதிரி) மற்றும் 3ம் எதிரி கணேசன் தான் குற்றவாளிகள் என கூறினார்களா என்றால் காவல்நிலையத்திற்கு வெளியே நான் இருந்தேன். அருணகிரி மற்றும் அவருடைய தகப்பானர் காவல்நிலையத்திற்குள் சென்றிருந்தார்கள்.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

9. காவல்நிலையத்தில் நான் உங்களை (3ம் எதிரி) பார்க்கவில்லை. 2ம் எதிரி கணேசனை எப்பொழுது காவல்நிலையத்திற்கு அழைத்து சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் 2ம் எதிரி கணேசன் எங்களுடன் காவல்நிலையத்தில் இருந்தார்.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.

Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution PW 6 |
| | | Defence |
| | | Court |
| Name | : முத்துமாரி | |
| Father / Husband Name | : தனசேகரன் | |
| Village | : அருப்புக்கோட்டை | |
| Taluk | : அருப்புக்கோட்டை | |
| Caste | : | |
| Calling | : நெசவு | |
| Religion | : இந்து | |
| Age | : 40 | |

( எதிரிகள் ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 18.09.2025.

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டை புளியம்பட்டி பகுதியில் அம்பேத்கார்

தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் தறி வேலை செய்து வருகிறேன். கடந்த 31.01.2019 அன்று இரவு 11.45 – 12.00 மணியவில் பாலகிருஷ்ணன் என்பவர் எனக்கு போன் செய்தார். நான் பாலகிருஷ்ணன் வீட்டில் தான் தறி வேலை செய்து வருகிறேன். போனில் பேசிய பாலகிருஷ்ணன் அவருடைய சித்தி வீட்டில் இறந்துவிட்டதாக கூறினார்.

2. அதன் பேரில் அவருடைய சித்தி வீடான ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் தெருவில் உள்ள வீட்டிற்கு சென்றேன். அங்கு அவர் சித்தி இறந்துகிடந்தார். இரத்தமாக இருந்தது. இரத்தத்தை அலசி விடுமாறு 2ம் எதிரி பாண்டியராஜன் கூறினார். நான் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர் பிளீச்சிங் பவுடர் போட்டு வீட்டை அலசினோம். அச்சமயம் பாலகிருஷ்ணனின் உறவினர்களான அருணகிரி, மகாலிங்கம், மாடசாமி, பிரகாஷ், அருணகிரியின் மனைவி கற்பகம், பாலகிருஷ்ணனின் மனைவி சுமதி மற்றும் எதிரிகள் பாண்டியராஜன், கணேசன் ஆகியோர் அங்கு இருந்தார்கள்.

3. இறந்த நபரை அருணகிரி அவர்கள் தூக்கி பார்த்தபோது காது மற்றும் கழுத்து பகுதியில் வெட்டுக்காயங்கள் இருந்ததால் அவருடைய இறப்பில் சந்தேகம் இருப்பதாக கூறினார்கள். போலீசாரிடம் புகார் தெரிவிக்கலாம் என பேசிக்கொண்டிருந்தார்கள். நான் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன். மறுநாள் காலையில் போலீசார் என்னை காவல்நிலையத்திற்கு விசாரணைக்காக அழைத்து சென்றார்கள். நடந்த விவரங்களை போலீசாரிடம் கூறினேன். போலீசார் இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

4. பாலகிருஷ்ணன் எனக்கு இரவு 11.45–12.00 மணிக்குள் போன்

செய்தார். அச்சமயம் என் வீட்டில் நான், என் மகள் மற்றும் என் அண்ணன் பிள்ளைகள் இருந்தோம். பாலகிருஷ்ணன் அவர்கள் என் வீட்டிற்கு வந்து அவருடைய இருசக்கரவாகனத்தில் என்னை அவர் சித்தி வீட்டிற்கு அழைத்து சென்றார். எத்தனை மணிக்கு நான் திரும்ப என் வீட்டிற்கு சென்றேன் என்றால் நான் பாலகிருஷ்ணன் வீட்டில் இருந்தேன். மறுநாள் போலீசார் என்னை பாலகிருஷ்ணன் வீட்டிலிருந்து தான் விசாரணைக்கு அழைத்து சென்றார்கள்.

5. எதற்கு போலீசார் என்னை அடித்தார்கள் என்றால் போலீசார் என்னை அடிக்கவில்லை. ஏன் வீட்டை அலசி விட்டீர்கள் என கொஞ்சம் அழுத்தி கேட்டார்கள். 02.02.2019 அதிகாலை சுமார் 3.00 மணியளவில் என்னை காவல்நிலையத்திலிருந்து விடுவித்தார்கள். என்ன சொல்லி விடுவித்தார்கள் என்றால் அன்றைய தினம் (02.02.2019) காலை 9.00 மணிக்கு காவல்நிலையத்திற்கு வருமாறு கூறி அனுப்பி வைத்தார்கள். 02.02.2019 அன்று காலை 9.00 மணிக்கு மீண்டும் காவல்நிலையத்திற்கு சென்றேன். என்னிடம் போலீசார் எதுவும் கூறவில்லை.

**3 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

**இல்லை.**

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.